# இலக்கண, மொழியியல் நோக்கில் தன்வினை, பிறவினை

**மா. ரூபவதனன்**

ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்
markruban@yahoo.co.uk

**சுருக்கம்:** தமிழில் உள்ள வினைச்சொற்களின் வகைப்பாடுகளில் தன்வினை, பிறவினை என்ற இருமைநிலை வகைப்பாடு முக்கியமானதாகும். ஆனால், அதற்குத் தமிழ் இலக்கணத்தில்- வினையியல் எனும் தனிப்பகுதி இருந்துங் கூட - அதிக முக்கியத்துவம் கொடுத்து தெளிவுற விளக்கியிருப்பதாகத் தெரியவில்லை. பன்னெடுங்காலமாக இவ்வினை வகைப்பாடு பல்வேறு விளக்கங்களைப் பெற்று வந்திருக்கிறது. மேலும், தன்வினை மற்றும் பிறவினையுடன் சேர்த்துக் காரணவினை என்ற ஒன்றையும் தமிழ்மொழிசார் மொழியியலாளர் விளக்கியுள்ளனர். இவ்வாய்வு தன்வினை, பிறவினை என்பது வினையியலில் முக்கியமான ஒரு வகைப்பாடு என்பதைக் காரணங்களுடன் நிறுவ முற்படுகிறது. அந்தவகையில், தொல்காப்பியர் காலந் தொடக்கம் தற்கால மொழியியலாளர் வரை தன்வினை, பிறவினை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்தெடுத்து மரபிலக்கணக் கோட்பாடுகள் மற்றும் மொழியியல் கோட்பாடுகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்து அவை குறித்துச் சிறந்த விளக்கம் கொடுக்க இவ்வாய்வு முனைகின்றது.